ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2262/24 - 2022 ජනවාරි මස 11 වැනි අඟහරුවාදා - 2022.01.11

2262/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 21/78 (IX)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

### 137 ஆம் பிரிவின் கீழான விதிகள்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 70 ஆ என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ மற்றும் 70 ஈ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான சட்டத்தின் 137 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

செயலாளர்,<br>
உயர்கல்வி அமைச்சு,<br>
குறித்துரைக்கப்பட்ட அதிகாரி.

கொழும்பு,<br>
2022, சனவரி 04.

#### விதிகள்

2018, ஓகத்து மாதம் 30 ஆந் திகதிய 2086/19 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 2013, ஓகத்து மாதம் 22 ஆந் திகதிய 1824/21 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி (நிறுவகங்களை பட்டம் வழங்கும் நிறுவனங்களாக ஏற்று அங்கீகரிப்பது தொடர்பான தத்துவங்கள்) விதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன : -

1A - PG 5699 - 510 (2022/01)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) "பாகம் IV" என்னும் சொல்லையும் எண்ணையும் உடனடுத்துள்ள தலைப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் : -

"செய்முறைப்படுத்தற் கட்டணங்கள்

(அ) மீளாய்வுக் கட்டணங்கள்"

(2) 35 ஆம் விதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் : -

"35. நிறுவனம்சார் மீளாய்வு மற்றும் விடய மீளாய்வு என்பன இவ்விதிகளுக்கான அட்டவணை III இல் தரப்பட்டவாறான செய்முறைப்படுத்தற் கட்டணமொன்றுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.";

(3) 37 ஆம் விதியில் "அத்தகைய வேறுபட்ட அமைவிடத்தை மதிப்பீடு செய்வதற்காக மேலதிகமாக விதிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய ஒவ்வொரு வேறுபட்ட அமைவிடத்தை மதிப்பீடு செய்வதற்காக மேலதிகமாக விதிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(4) 37 ஆம் விதியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துவதன் மூலமும் : -

"(ஆ) மீள் மீளாய்வுக் கட்டணங்கள்

38. நிறுவனம்சார் மீள்மீளாய்வு மற்றும் விடய மீள் மீளாய்வு, முதலாம் நிறுவனம்சார் மீளாய்வு மற்றும் விடய மீளாய்வுத் தேதியிலிருந்து ஐந்து (5) ஆண்டுகளின் பின்னரும் அதன் பின்னரான ஒவ்வொரு ஐந்து ஆண்டுகள் முடிவிலும் தொடர்ச்சியாக நடாத்தப்படுதல் வேண்டும். மீள் மீளாய்வுகளுக்கு ஏற்புடையற்பாலதான செய்முறைப்படுத்தல் கட்டணங்கள் அட்டவணை IV இல் தரப்படுகின்றன.

39. (1) பட்டம் அளிக்கும் நிறுவகமொன்று இவ்விதி நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர் முற்போந்த நாளன்று -

(அ) நிறுவனம்சார் மீளாய்வு மற்றும் விடய மீளாய்வுத் திகதியிலிருந்து ஐந்து (5) அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளை நிறைவு செய்துள்ளவிடத்து, இவ்விதிகள் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஆறு (6) பஞ்சாங்க மாதங்களினுள்;

(ஆ) நிறுவனம்சார் மீளாய்வு மற்றும் விடய மீளாய்வுத் திகதியிலிருந்து ஐந்து (5) ஆண்டுகளை நிறைவு செய்திராதவிடத்து, சொல்லப்பட்ட ஐந்து (5) ஆண்டுகள் நிறைவு செய்யப்படும் திகதியிலிருந்து மிக்க முன்னராகவுள்ள நேரத்தில் ஆனால் இரண்டு பஞ்சாங்க மாதங்களைத் தாமதிக்காமல்,

அட்டவணை I மற்றும் II இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளில் தரப்பட்டுள்ள முறையில் சொல்லப்பட்ட நிறுவனத்தின் மீள் மீளாய்வுக்கான வழிகாட்டு நெறிகளில் தரப்பட்டுள்ள விபரங்களை உள்ளடக்கி, பாகம் I அல்லது பாகம் II அல்லது அவை இரண்டையும் கொண்ட விண்ணப்பமொன்றை குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மீளாய்வு விண்ணப்பத்துக்கான எவையேனும் திருத்தங்கள் அல்லது வேறுபாடு, இயைபான விண்ணப்பத்தை மீள் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கும் போது பட்டம் அளிக்கும் நிறுவகத்தினால் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டு தெளிவுற அடையாளமிடப்படுதல் வேண்டும். அட்டவணை IV இல் தரப்பட்டுள்ள ஏற்புடையற்பாலதான செயல்முறைப்படுத்தல் கட்டணங்களின் கொடுப்பனவுக்கான எண்பிப்பு விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

40. பட்டமளிக்கும் நிறுவகமொன்று, விடயத்துக்கேற்ப 39 (1) (அ) அல்லது (ஆ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின்போது நிறுவனம்சார் மீள் மீளாய்வொன்று மற்றும் விடய மீள் மீளாய்வுக்கான வழிகாட்டு நெறிகளில் தரப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாதவிடத்து, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி, மீள் மீளாய்வுகளுக்காக சொல்லப்பட்ட

விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திகதியின் பின்னர் மேலதிகமாக மூன்று மாத காலப்பகுதியொன்றை அனுமதித்தல் வேண்டும். அவற்றிற்கு அட்டவணை IV இல் தரப்பட்டவாறான தொகைகளின் 50% சதவீத தாமதக் கட்டணமொன்று அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக தகவுக்கேற்ற அடிப்படையில் விதிக்கப்படுதல் வேண்டும்.

41. பட்டம் அளிக்கும் நிறுவகம் நிறுவனம்சார் மீள் மீளாய்வு மற்றும் விடய மீள் மீளாய்வுக்கான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்றவிடத்து, குறித்துரைக்கப்பட்ட அதிகாரி அத்தகைய இணங்கியொழுகாமை சம்பந்தமாக அமைச்சருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பிரதியொன்று பட்டம் அளிக்கும் நிறுவகத்துக்கு அனுப்பப்படுதல் வேண்டும்."

(5) 41 ஆம் விதியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துவதன் மூலமும் : -

"(இ) பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை திருத்துவதற்கு ஏற்புடையற்பாலானவான விதிப்பனவுகள்

42. ஏதேனும் பட்டம் அளிக்கும் நிறுவகம், ஏதேனும் பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கான பாட விதானம், நுழைவுத் தகைமைகளுக்கான எவையேனும் திருத்தங்களை அல்லது ஏதேனும் கற்கை நிகழ்ச்சித் திட்டத்தை தரமுயர்த்துவதற்கான அல்லது தரப்படுத்துவதற்கான திருத்தங்களை உத்தேசிக்கின்றவிடத்து, அத்தகைய நிறுவகம் இயைபான விபரங்கள் அடங்கிய விண்ணப்பமொன்றை குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அட்டவணை V இல் தரப்பட்டவாறான செய்முறைப்படுத்தற் கட்டணங்களுக்கான கொடுப்பனவு பற்றிய எண்பிப்பு விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்."

(6) 38 ஆம் விதியை 43 என மீள இலக்கமிடுவதன் மூலமும்.

(7) மூன்றாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணையை உட்புகுத்துவதன் மூலமும் : -

[விதி 38]

**அட்டவணை IV**

(அ) ஐந்தாண்டு (5) காலப் பகுதியொன்றிற்கு ஏற்புடையற்பாலதாகவுள்ள நிறுவனம்சார் மீள் மீளாய்வுக்கான செய்முறைப் படுத்தற் கட்டணம் 1,200,000.00 ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) ஐந்தாண்டு (5) காலப்பகுதியொன்றிற்கு ஏற்புடையற்பாலதாகவுள்ள விடய மீள் மீளாய்வுக்கான செய்முறைப்படுத்தற் கட்டணங்கள் பின்வருவனவாகவிருத்தல் வேண்டும் :-

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *இலங்கை தகைமைக் கட்டுக்கோப்பு (SLQF) மட்டம்* | *தகைமை வகை* | *விதிக்கப்பட வேண்டிய தொகை (ரூபா)* |
| SLQF 12 | கலாநிதிப் பட்டம் (PhD) | 750,000.00 |
| SLQF 11<br>SLQF 10<br>SLQF 09 | தத்துவவியல் முதுமாணி<br>முதுமாணிப் பட்டம் | 600,000.00 |
| SLQF 08<br>SLQF 07<br>SLQF 06<br>SLQF 05 | பட்டப்பின்படிப்பு திப்புளோமா<br>பட்டப்பின்படிப்புச் சான்றிதழ்<br>சிறப்பு இளமாணிப் பட்டம்<br>இளமாணிப் பட்டம் | 500,000.00 |

[விதி 42]

## அட்டவணை V

(இ) ஏலவே ஏற்றங்கீகரிக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கான (பாட விதான பரிசீலனை, நுழைவுத் தகைமை) எவையேனும் திருத்தங்களுக்கான மீள் செய்முறைப்படுத்தற் கட்டணங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *இலங்கை தகைமைக் கட்டுக்கோப்பு (SLQF) மட்டம்* | *தகைமை வகை* | *விதிக்கப்பட வேண்டிய தொகை (ரூபா)* |
| SLQF 12 | கலாநிதிப் பட்டம் (PhD) | 375,000.00 |
| SLQF 11<br>SLQF 10<br>SLQF 09 | தத்துவவியல் முதுமாணி<br>முதுமாணிப் பட்டம் | 300,000.00 |
| SLQF 08<br>SLQF 07<br>SLQF 06<br>SLQF 05 | பட்டப்பின்படிப்பு திப்புளோமா<br>பட்டப்பின்படிப்புச் சான்றிதழ்<br>சிறப்பு இளமாணிப் பட்டம்<br>இளமாணிப் பட்டம் | 250,000.00 |

EOG 01 - 0121

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.